[illegible] இந்தியா.

11 12

ஜூன், 1998.

173

JL
Y31m2,N26
N28.2.12
199372

1255

Reg. No. M. 2169

ரூரல் இந்தியா

(பாரேஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமினாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்,
ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதறாஸ்.

வால்யூம் II.] ஜூன், 1928 [நெ. 12

பொருளடக்கம்.

நெ.		பக்கம்.
1.	பாரெஸ்ட்டுப் பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்கள் அனைவர்க்கும் விஞ்ஞாபனம்	155
2.	சென்னையில் பஞ்சாயத்துகள்	156
3.	ஒரு கிராம விஷயங்களை கவனித்து அறிந்தது	159
4	தொழில்சாலை யூழியர்கள்	160
5.	பட்டணங்களின் விருத்தியால் உண்டாகும் கெடுதிகள்	161
6.	மழைக்கு அடையாளங்கள்	162
7.	நெல்விளைவுகளை குறைய விடாமல் தடுப்பது எப்படி	163
8.	கிராமப் பஞ்சாயத்துகள்	165
9.	வாசக சாலையும், பொது இடமும்	167
10.	காப்பி குடிப்பவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்	168
11.	நமது நாட்டின் தௌர்ப்பாக்கிய நிலைமை	171
12.	வெற்றிலைக் கொடியை வாட வைக்கும் நோய்	174

Annual Subscription (inclusive of Postage)
Inland Rs. 3 : Foreign Rs. 4—8—0.
Single copy, Inland As. 6, Foreign As. 8.

Rural India reaches the Villages and Towns of India. It is the best medium for advertisement.

Lantern Slides

ARE A GREAT HELP IN WORK WITH

Adult Illiterates

Teach the three "Rs" and lessons in

GEOGRAPHY HISTORY

GEOLOGY HYGINE

AGRICULTURE SCOUTING

ZOOLOGY HANDICRAFT

TEMPERANCE

We Sell LANTERNS ACCESSORIES SLIDES

We can help with your programme of Visual Lessons

Write to :—

The Secretary Lecture Department,

5, Russell Street, Calcutta,

ரூரல் இந்தியா

(பாரேஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்டு டிப்டிகலெக்டர்,

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர்.

வால்யூம் II.] ஜுன், 1928 [நெ. 12

பாரேஸ்ட்டுப் பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்கள் அனைவர்க்கும் விஞ்ஞாபனம்.

பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களின் யூனியன் இந்தியன் கம்பனிஸ் ஆக்டின்படி ரிஜிஸ்டராகி மூன்று மாதங்களாகி விட்டன. யூனியன் சம்பந்தமாய் மேற்கொண்ட வேலைகள் இன்னும் கைக்கொள்ளப்படவில்லை. கவர்மெண்டாரும் பஞ்சாயத்துகளை யேற்படுத்தும் வேலையை முடித்து விட்டார்கள். அவர்கள் நம்முடைய முயற்சிகளை கவனித்து வருகிறார்களென்பதில் சந்தேகமேயில்லை. பஞ்சாயத்துக்காடுகளை சரிவரப் பாதுகாத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய வேலை நம்முடைய முதல் முக்கிய வேலையாகிறது. மாஹாண யூனியனுக்கு அனுகுணமாக பஞ்சாயத்துகள் ஒன்று சேர்ந்து, தாலூக்கா யூனியன்களாகவும் ஜில்லா யூனியன்களாகவும் வேலை செய்யவேண்டியது அவசியமானது. அப்படி யூனியன்கள் உண்டானால் பஞ்சாயத்து குறைகளையும், நன்மைகளையும் சரிவர உணரக்கூடும். தவிர, அவைகள் தேசாபிவிருத்தி விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி முயர்ச்சி செய்யக்கூடும். மேலும், தங்களுக்குள்ளப் பொதுக்குறைகளை கவர்மெண்டாருக்கும் அதிகாரிகளிற்கும் மீடிங்குகளில் தீர்மானங்களின் மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளக்கூடும். பிரசாரங்களை நடத்த இவ்வித யூனியன்கள் உபயோகப்படக்கூடியவை. ஐக்கிய உணர்ச்சி அங்கத்தினர்களுக்கும், கிராம ஜனங்களிற்கும் உண்டாகும். மீடிங்குகளை வைத்துப் பலதேசமுயர்ச்சிகளைப்பற்றி வர்த்தமானங்களைப் பொது ஜனங்களின் விவேகத்தின் பொருட்டு உபந்நியசித்துச் சொல்லலாம். கிராமச்சுகாதாரநிலை கிராமாந்தர ரோட்டு பாதைகள் முதலியவைகளின் நிலை, கிராம ஜனங்களின் கல்வி இவைகளைப்பற்றிக் கவனித்து முயர்ச்சிகளைச் செய்யலாம். அதிகாரி

களுக்கும் தக்கவாறு இவைகளை யெடுத்துக்காட்டலாம். கிராமாந்தரங்களிலுள்ளப் பலவிதக்குறைகளையும், சீர்கேடுகளையும் கவனித்து அவைகளின் விஷயமாய் முயர்ச்சிகளை செய்யலாம். இப்படி பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் யூனியன்களாகி வேலைசெய்யவேண்டிய தவசியமான விஷயம். மாஹாண யூனியனுக்குக்கிளைகளாவாயந்து ஜில்லா யூனியன்களும் தாலூகா யூனியன்களும் எற்பட்டு நமது இயக்கத்திற்கு எண்ணக்கூடாத பலமும் அந்தஸ்தும் யேற்படும் தேசாபிவிருத்தி முயர்ச்சிகள் நன்ருக நிறைவேறக்கூடும் கிராம ஜனங்களுக்கு சுகசௌக்கியங்களும் செல்வவிருத்தியும் மேல் மேலும் உண்டாகும். "ரூரல் இந்தியா" பத்திரிகையில் பஞ்சாயத்தார்களின் முயர்ச்சிகள் பிரசுரத்திற்குத் தற்போதில் அனுப்பப்படுகிறதே யில்லை. தாலூகா யூனியன்களாகவும், ஜில்லா யூனியன்களாகவும் அமைந்து அவைகள் வேலை செய்தால் இவ்வித முயற்ச்சிகளைக் கட்டாயமாக பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டும். இப்படிப் பட்டவர்த்தமானம் பஞ்சாயத்தார்களுக்கும், பொது ஜனங்களுக்கும், கவர்மெண்டாருக்கும் உபயோகமாகும்.

ஆகையால் பிரதி ஜில்லாவிலும், ஜில்லா யூனியன்களும் தாலூகா யூனியன்களும் யேற்பட்டு தேசசேவையைச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

197312

சென்னையில் பஞ்சாயத்துகள்.

Panchayats in Madras

[இது செய்யார் டிவிஷனிலுள்ள பஞ்சாயத்துகளின் கான்பரன்ஸ் அக்ராஸனத்தோரணையில் திவான்பஹதூர் எம். ராமச்சந்திரராவ் அவர்கள் செய்த உபந்நியாஸத்தின் சங்கிரஹம்.]

10 வருஷங்கள் கிளாச்சி செய்து 1920 வருஷத்திய கிராம பஞ்சாயத்து சட்டத்தை யடைந்தோம். இந்த 7,8 வருஷகாலத்தில் அவைகள் சரியான்படி வேலை செய்துவந்தன வென்றே சொல்வேன். ஆன்போதிலும் கிராம முன்னேற்ற முயர்ச்சிகள் திருப்திகரமாக நடக்க வேண்டுமென்ருல் கவர்மெண்டாரின் பல துறைகளிலுள்ள நோக்கங்கள் சில மாறுபாடுகளை அடையவேண்டியதாக விருக்கின்றன. பப்ளிக் வொர்க்ஸ், ரெயில்வே, லாண்டு ரெவினியூ டிபார்ட்மெண்டுகளினுல் கிராமங்களின் முயர்ச்சிகளுக்கு பலவிதமாக இடையூறுகள் ஏற்பட்டு விட்டன. ஆகவே, கிராமாந்தரச்சீரமைப்பு ஏற்படவேண்டுமானுல், கவர்மெண்டார் மேற்கூறிய டிபார்டுமெண்டுகளின்

முயர்ச்சிகள் எந்தெந்த விதத்தில் கிராம அபிவிருத்திக்கு இடையூறுகளாக அமைந்திருக்கின்றன வென்று கவனித்துப் பரிசோதித்து அறியவேண்டும்.

கிராமங்களில் சுகாதாரக்குறைகள். 1. கிராமங்களில் மேல் மேலும் வீடுகளைக்கட்ட இடம் கிடையாது. 2. ஆடு மாடுகளுக்கு மேயவும் உலாவவும் இடம் கிடையாது. 3. ஜனங்களுக்கு ஜலமலபாதைகளுக்காக ஒதுங்கத் திறந்தவெளிகளும் இல்லை 4. ஜனங்களுக்குக்குடிக்க நல்ல ஜலஏற்பாடும் கிடையாது 5. நத்தங்களிற்கு அருகிலேயே சாகுபடிக்கு நிலங்கள் தர்காஸ்தில் கொடுக்கப்படுகின்றன.

கிராம நன்மைக்காக நிலங்களை வாங்கி கிராமசமுதாயங்களுக்கு ஒப்பிவிக்க கலெக்டர்களுக்கு கவர்மெண்டார் அதிகாரத்தைக் கொடுத்திருந்தபோதிலும் கலெக்டர்கள் சாதாரணமாய்ச் சிரத்தை யெடுத்துக் கொண்டு நிலங்களை கிராம சமுதாயங்களுக்கு வாங்கிக்கொடுக்கிறதே யில்லை. மந்திரியவர்கள் இதை கவனித்துச் சீர்திருத்தத்தை யுண்டாக்குவார் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிக ரெவினியூ ஏற்படவேண்டிய நோக்கத்துடன் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு துண்டு நிலமும் சாகுபடிக்கு தர்காஸ்திலாவது சேலாகவாவது கொடுக்கப்பட்டுவருகிறது இந்தக்காரணத்தினுல் ஆடு மாடுகளுக்கு மேய்ச்சலுக்காக இடமே யில்லாமல் போகிறது. சர்க்காரின் ஜலாசயப் பாய்ச்சலையுடைத்தான நஞ்சைகளையுடைய கிராமங்களில் சாகுபடிகாலத்தில் கால் நடைகள் வேறு ஊர்களுக்கு அனுப்பப் படவேண்டியதாக விருக்கின்றன. சாகுபடிக்கு மாற்றப்பட்ட மேய்கால் நிலங்களைத்திரும்பி வாங்கி மேய்கால்களாக அமைக்க வேண்டுமானுல் கஜானுக்களிலிருக்கிற பணங்களே போதாது. செடில்மெண்டு காலங்களில் செடில்மெண்டாபீசர்கள் இவ்விதச்சீர்கேட்டைக் கவனித்துப் பரிசோதித்து தக்க ஏற்பாடுகளைச்செய்ய முயல வேண்டும்.

கிராமங்களில் மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் நிற்கவும் ஜலமல பாதைகளுக்கு ஒதுங்கக்கூட ஸ்தலமிராவிடின் கிராமச்சுகாதார நிலை எப்படி திருப்திகரமாக விருக்கும்? பஞ்சாயத்துகளால் என்ன செய்ய முடியும்.? பஞ்சாயத்துகளிடத்தில் இவ்வித வேலைகளுக்காக பணமே கிடையாது. மந்திரியவர்களும் ரிஸர்வபொதியாரும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டுத்தான் இந்த சீர்கேட்டை நீக்கவேண்டும்.

கிராமாந்தர ஜலவஸதி.

சில ஊர்களில் ஆறுகளின் பிரவாஹங்களிலிருந்து ஏறிகளிலும் குளங்களிலும் ஜனங்கள் தங்களுக்கு வருஷமுழுவதும் சாகுபடிக்கும் பானத்திற்கும் வேண்டிய ஜலத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். மற்ற ஊர்களுக்கு ஊற்று ஜலம்தான் ஆதாரம். ஊற்று விஷயமாகப் பலவித கண்முடித்தனமான உபாயங்கள் அநுஸரிக்கப்படுகின்றன. ஊற்று அகப்படும் என்று அதிக திரவியங்களைச் செலவிட்டு ஊற்று அகப்படாத ஸ்தலங்களையெல்லாம் வெட்டிப்பார்க்கிறார்கள். இப்படிச்செய்வதால் பயனொன்றும் ஏற்படாது. பூமிக்குமேல் எப்படி பிரவாஹங்கள் ஓடுகின்றனவோ அப்படிப்போலவே பூமிக்குள்ளேயும் ஜலப்பிரவாஹங்கள் ஓடுகின்றன. இவைகளின் மார்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டு மாப்புகள் (Map) தயாரிக்கப்படவேண்டும். கிராமத்தார்களுக்கு இந்த மாப்புகள் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் அவைகளைப்பார்த்து ஊற்றுகளை வெட்டினால் ஜலம் அகப்படாமல் போகாது. அமெரிகாவில் இவ்விதமாக ஊற்றுப்பிரவாஹ ஸர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அந்த தேசத்திய கிராமங்களுக்கு சொல்லக்கூடாத நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ரெயில்வே லைன்களைப் போடுவதற்காக கிராமங்களில் பல இடங்களில் மண்தோண்டப்பட்டு பள்ளங்கள் ஏற்படுகின்றன. ஊர்களுக்கு சமீபங்களில் இவ்விதப்பள்ளங்கள் வெட்டப்படுகின்றன. இவைகள் வெட்டப்பட்ட பின்பு வெகுகாலம் வரையில் அடைக்கப்படுகிறதேயில்லை. 50, 60 வருஷங்களுக்குமுன் வெட்டப்பட்ட பள்ளங்கள் இன்னும் பள்ளங்களாகவேயிருக்கின்றன. இப்பள்ளங்களால் அருகிலுள்ள கிராமங்களின் ஜனங்களுக்குச் சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. இது விஷயமாய் கவர்மெண்டார் கவனித்து பள்ளங்களை உடனேக்கி உடனே ரெயில்வே கம்பனிகள் அடைக்குமாறு உத்திரவிட வேண்டும்.

ஆகவே கவர்மெண்டுகளின் முயர்ச்சிகளால் சிலவகை இடையூறுகள் கிராம அபிவிருத்திக்கு விளைகின்றன. கவர்மெண்டார் நன்றாய்க்கவனித்து அப்படி இடையூறுகள் விளையாதபடி முயர்ச்சி இவைகளைச்செய்ய வேண்டும்.

ஒரு கிராம விஷயங்களை கவனித்து அறிந்தது.

Village Study

[இது ஜெய்பூரில் பாரெஸ்டு டிபார்டிமெண்டில் ஸ்பெஷல் ஆபீஸராக விருக்கும் ம-ள-ள-ஸ்ரீ வி. என். விஸ்வநாதன் அவர்களால் எழுதப்பட்டது.]

பயிரிடுவோர்க்கு பயிர் நிலத்திற்கு அடுத்தாப்போல் அவசியமாக வேண்டியவை மாடுகள். அவர்கள் உழவுமாடுகளை வைத்துக்கொண்டிருப்பதோடு பசுக்களையும் எருமைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தபட்டணங்களில் பசுக்களின்பால் நீர்சேர்க்கப்பட்டு பெண்பிள்ளைகளால் கொண்டுபோகப்பட்டு வெகுசீக்கிரத்தில் விற்கப்படுகிறது. ஜனங்களிற்குக் காபி குடிக்கிற அப்பியாஸம் அதிகப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் நீர்பாலையும் தவக்கமில்லாமல் உடனே வாங்கிவிடுகிறார்கள். எருமை மாடுகளிலிருந்து வியவசாயிகள் தயிரையும் நெய்யையும் அடைகிறார்கள். அவைகளும் வெகு சீக்கிரத்தில் விலையாகிவிடுகின்றன. பெண்பிள்ளைகள் இவ்வித வியாபாரங்களைச் செய்து மாதம் ஒன்றுக்கு 10, 15 ரூபாய் வருமானத்தை நபரொன்றுக்கு அடைகிறார்கள்.

இங்கிலீஷ்க்காரர் அப்பியாஸங்கள் ஏற்படுவதற்குமுன் நம்முடைய தேசத்தில் காபிகுடிக்கிற வழக்கம் இருந்திருக்கவில்லை. ஆகவே, அக்காலத்தில் பசுவின்பால் இக்காலத்தில் போல இவ்வளவு அதிகமாக செலவழிக்கப்படவில்லை. கன்றுகள் வேண்டியமட்டும் தாய்ப் பசுக்களிடத்தில் ஊட்டி நன்றாய் வளர்ந்துவந்தன. இப்பொழுது கன்றுகளுக்கு அம்மாதிரியாக பால் ஊட்டுக்கு அகப்படுகிறதில்லை. அந்தகாரணத்தினால் கன்றுகள் நன்றாக வளருகிறதில்லை. மாடுகளிலிருந்து பால், தயிர், நெய் இவைகளுடன் பயிர்செய்ய வேண்டியதற்கு எருவும் வியவஸாயிகளுக்கு அகப்படுகிறது.

ஒவ்வொரு வியவஸாயியும் 10 மாடுகளை உடைத்தாயிருக்கிறான். கிராமமுழுமைக்கும் 300 மாடுகளிருக்கின்றன. இவைகள் சரிவர ஸம்ரக்ஷிக்கப்படுகிறதில்லை. அவைகளுக்குச் சரியான கொட்டில்கள் கிடையாது கண்ட இடங்களில் கட்டப்பட்டு வெய்யலிலும் மழையிலும் தவித்துக்கொண்டிருக்கின்றன. சில மாடுகள் வீட்டில் வாசலில் லைக்கோலால் கூறைபோடபட்ட சிறுபந்தல்களில் கட்டப்பட்டிருக்கின்றன.

தானியம் அறுவடையானபின்பு வைக்கோல்கள் மாடுகளின் போஷணைத்திற்காக போர்போட்டு வைக்கப்படுகின்றன. இந்த வைக்கோல் கவலை எருதுகளுக்கும் உழவுமாடுகளுக்கும் மாத்திரம் உபயோகிக்கப்படுகிறது. பசுக்கள் அடுத்தகாட்டிற்கு மேய்ச்சலுக்கு அனுப்பப்படுகின்றன. அவைகளுக்கு 6 மாசம் நல்ல மேய்ச்சல் அகப்படுகிறது. அப்புறம் 3 மாசம் குறைவான மேய்ச்சல்தான் அகப்படுகிறது. மீதிமாதங்களில் அவைகள் வேலமரக்கிளைகளையும் தழைகளையும் பூண்டுகளையும் மேய்கின்றன. பாரெஸ்டு டிபார்டுமெண்டார் வருஷம் 1க்கு மாடு 1க்கு 8 அணா வீதம் மேய்ச்சல் பீசை ச்சார்ஜ் செய்கிறார்கள். மாடுகளை ஓட்டிக்கொண்டு போகிற இடையனுக்கு மாதம் 1க்கு மாடு 1க்கு 4 அணா வீதம் சம்பளம் கொடுக்கவேண்டிய விருக்கிறது. ஆகவே மாடு ஒன்றுக்கு வருஷம் 1க்கு ரூ. 3—8—0 செலவிருக்கிறது.

கிராமத்திற்கு அருகில் காடு இல்லாதபோனால் மெய்ச்சலுக்குக் கஷ்டமேற்படுகிறது. அவ்வித கிராமத்தில் வியவசாயிகள் அகப்படக்கூடிய திறந்தவெளிகளைத்தான் மேய்ச்சலுக்காக உபயோகப்படுத்த வேண்டியதாக விருக்கிறது. நூற்றுக்கணக்கான மாடுகள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டு அதில் மேயவேண்டியதை சற்று ஆலோஜித்துப்பாருங்கள். மேலும், மழைதூரினபின்பு கொஞ்சம் புல் விழுவதற்கு முன்னமேயே இப்படி மாட்டுக்கூட்டங்கள் மெதிப்பதால் இந்த அல்ப மேய்ச்சல் பூமிகளில் புல் தக்கபடி விழுகிறதில்லை. டெல்டா கிராமங்களில் நத்தத்தில் தவிர மற்ற எவ்விடத்திலும் சாகுபடிக்காக ஜலம் தேக்கப்படுவதால் மாடுகளுக்கு உலாவக்கூட சௌகரியங்கள் போய் விடுகின்றன. பயிர் அருவடையான பிறகு கழனிகளில் தாள்களை மாடுகள் மேய்கின்றன.

பெண்பிள்ளைகள் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறார்கள். தினந்தோறும் புல்லைவெட்டிப் பசுக்களுக்குப் போடுகிறார்கள். மாடுகள் அவர்களுக்கு நல்ல வரும்படியைக் கொடுக்கிறபடியால், அவைகளுக்கு மேல் மேலும் போஷணத்தைச் செய்கிறார்கள். கூடுமானால் புண்ணக்கு, தவிடு, பொட்டு முதலியவைகளையும் போடுகிறார்கள்.

தொழில்ச்சாலை யூழியர்கள்

கிராமங்களில் வாஸமாயிருக்கப்போவதினால் கிராம ஜனங்களின் வாழ்வுகளில் ஏற்படும் மாறுபாடுகள்.

காபி தோட்டங்கள் தேயிலைத்தோட்டங்கள் ரப்பர் தோட்டங்கள் இவைகளில் சம்பள ஏற்பாட்டில் அநேக ஜனங்கள் அமைந்து

வேலைசெய்கின்றன. ரெயில்வேக்களிலும் தொழில்ச்சாலைகளிலும் சுரங்கங்களிலும் இவ்விதமாகவே கணக்கில்லாத ஜனங்கள் வேலை செய்கின்றன. தோட்டங்களும் ரெயில்வேக்களும் தொழில்ச்சாலைகளும் ஏற்படுவதற்கு முன்னே இவர்கள் தங்களுடைய கிராமங்களிலேயே வஸித்துக்கொண்டு கிராம வேலைகளிலேயே அமைந்திருந்தார்கள். ஊர்களை விட்டு வெகு தூரங்களிலுள்ளப் பிரதேசங்களில் இவர்கள் ஊழியம் செய்து வஸித்தமையால் யோக க்ஷேமவழிகளில் பல நூதன முறைகளையும் உணர்ச்சிகளையும் கைக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கிராமங்களில் திரும்பிவந்து வாஸமாகயிருக்க ஆரம்பித்த உடனே இவர்களுடைய நூதன நடைகளும் உணர்ச்சிகளும் ஏற்கனவே கிராமங்களில் வாஸமாயிருக்கும் ஜனங்களால் ஆச்சரியத்துடன் கவனிக்கப்பட்டு பிறகு அவைகள் நல்லவைகளாயிருந்தாலும் சரி, கெட்டவைகளாயிருந்தாலும் சரி கைக்கொள்ளப்பட்டு அநுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால் இதுவரையில் இவ்வித மாறுபாடுகள் நல்லவைகளாகவே அமைந்திருக்கின்றன. கிராமங்களில் வேலையும் வரும்படியுமில்லாத ஜனங்களுக்குத் தொழில்ச்சாலைகளும் காபிதோட்டங்களும் வேலைகளைக்கொடுத்து ஜீவனத்தையுண்டாக்கிவிட்டன. அவைகளில் வேலை செய்து விட்டு கடைசி காலத்தில் கிராமங்களில்வந்து சேர்ந்தபின்பு அவர்களுடைய உணர்ச்சிகளும் நடைகளும் கிராம ஜனங்களின் முன்னேற்றத்திற்கு அநுகுணமாகவேயிருக்கின்றன.

பட்டணங்களின் விருத்தியால் உண்டாகும் கெடுதிகள்.

சென்ற 70 வருஷங்களில் கிராம ஜனங்கள் பட்டணங்களில் மேல் மேலும் குடியேறிக்கொண்டு வருகிறார்கள். இப்படி ஜனங்கள் அதிகமாக பட்டணங்களில் வஸிப்பதால் குடித்தனங்களிற்குச்செலவுகள் அதிகமாவதுடன் ஊர்களில் புழுதி அதிகமாக ஏற்படுகிறது. நோய்களும் உண்டாகின்றன. ரெயில்வே உண்டாயிருப்பதால் கிராம ஜனங்களுக்குத் தங்களுடைய தானியம் முதலியவைகளை வியாபாரம் செய்வதற்கு கிட்டினஊர்களைக்காட்டிலும் பட்டணங்களில் அதிகமான சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பட்டணங்களில் அதிக ஜனங்களின் வாஸத்தினால் அதிக தனஉற்பத்தி ஏற்படாவிட்டாலும், அதிக வியாபார முயர்ச்சிகளுக்கு வேண்டிய ஸ்தாபனங்கள் பலவகைகளில் ஏற்பட்டு ஜனங்களுக்கு ஜீவனோபாயங்களைக் கொடுக்கின்றன. கிராம ஜனங்கள் பட்டணங்களிற்குச் சென்று அங்கே வாஸமாயிருக்கத்

தொடங்குவதற்கு இதுதான்காரணம். பட்டணங்களில் ஜனத்தொகை தாங்கமுடியாமல் அதிகமாகி விட்டால் சௌகரியங்கள் அவைகளில் எப்பொழுதும்போல் கிடைக்காது. ஜல சௌகரியமும், விலைவாசிகளும் அதிகரித்துவிடும். மேற்சொல்லிய காரணங்களினால் கவர்மெண்டின் நிர்வாஹச்செலவும் அதிகரித்துவிடும்.

மழைக்கு அடையாளங்கள்.

மழை பெய்வதற்கு ஆரம்பிக்கும்போதுதான் பெய்யப்போகும் அடையாளங்களை அது நமக்கு முன்னதாகவே காட்டுகின்றது. அந்த அடையாளங்களுள், மின்னல் மின்னுவதொன்று "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்று கொன்றைவேந்தன் கூறுவதை நாம் படித்திருக்கின்றோம். காற்று மும்முரமாய் வீசுவதும் மழைக்கடையாளமென்பதைக் "கடுங்காற்று மழை காட்டும்" என்று வழங்கும் பழமொழியினால் அறிந்துகொள்ளுகிறோம்.

நிலம், நீர், தீ, முதலிய பூத பௌதிகங்களைப்பற்றிய நூல்களில் தேர்ந்துள்ள நிபுணர்கள், பாரோமீடர் என்னும் காற்றின் கனத்தை அளக்குங் கருவியாலும், தெர்மாமீடர் என்னும் சீதோஷ்ண நிலைமையைக் காட்டும் கருவியாலும் மழைவருங் காலங்களை நன்கு அறிகிறார்கள். ஆனால் இவைபோன்ற கருவிகள் வழங்கப்பெறாத காலத்திலிருந்தவர்கள் சில பறவைகள், மிருகங்கள் முதலிய ஜீவராசிகள் மூலமாவும் சில செடிகளின் மூலமாகவும், மழையின் அடையாளத்தை யுணர்ந்து வந்தார்கள். நாம் பல நூல்களின் வாயிலாகத் தெரிந்துகொண்ட அவற்றை இங்கெடுத்துக் காட்டுவோம்.

அதுவரையில் மழை பெய்யப் போகிறதென்னும் அடையாளத்தை :—

வாசனை வீசுதற்குறிய சில புஷ்பங்கள் மிகுதியான நறுமணத்தை வெளியிடும் போதும்,

தூக்கணான் முதலிய பறவைகள் பூமிக்கு மேலே தூரத்திற் பறவாமல் சமீபத்திலேயே பறக்கும்போதும்,

ஆண்வாத்து பெட்டைவாத்து முதலியவ்வதாமே வலியத் தண்ணிரிருக்கும் இடத்திற்குச் சென்றுதமது இறகுகளை நன்றாய் நனைத்துக்கொள்ளும் போதும்,

குதிரை மாடு முதலிய கால்நடைகள் அடிக்கடி கழுத்தை நீட்டி மேலே தூக்கிக் காற்றை யுள்ளுக்கு வாங்கி முகர்ந்து கொண்டிருக்கும் போதும்,

சிலந்திகள் தாமே வலியத் தமது வலைகளையழிக்கும் போதும்,

பூமியின் அடிப்புரத்திலுள்ள பிள்ளைப் பூச்சி, நாகப்பூச்சி முதலியவை பூமியில் இங்குமங்குமாகச் சிறு சிறு துவாரங்களை ஏராளமாய்ச் செய்து வைக்கும் போதும்,

குயில் முதலிய பட்சிகள் பாடாமல் விசனமாயிருக்கும்போதும்,

ஆடு மாடு முதலானவை தாம் மேய்ந்து கொண்டிருக்கும் மைதானங்களில் நீர் நிமித்தமாய் நாற்புறமும் ஓடி ஒன்றோடொன்று மோதி ஆரவாரஞ் செய்யும்போதும்,

மலர்ந்துள்ள புஷ்பங்கள் திடீரென்று குவிந்து விடும்போதும்,

நமது கண்களுக்கு நன்றாய்ப் புலப்படாமல் நெடுந்தூரத்திலுள்ள பொருள் அதி சமீபத்திலிருப்பவை போல் தெளிவாய் நம் கண்களுக்குத் தெரியும் போதும்,

வெகு தூரத்திலிருக்கும் தேவாலயங்களின் மணி முதலியவற்றின் சப்தங்கள் நமது காதுகளுக்கு மற்றக் காலங்களை விட அதிகத் தெளிவாயும் உரத்துக் கேட்கும்போதும்,

எறும்புகள் ஏராளமாகத் தமது முட்டைகளைத் தூக்கிக்கொண்டு புற்றை நோக்கிச் செல்லும் போதும் மழைவெகு சீக்கிரத்தில் பொழியும்.

(பால விநோதினி)

நெல் விளைவுகளை குறையவிடாமல் தடுப்பது எப்படி

[கெ. வெங்கிடராமய்யர், எம். ஏ. உதவி நெல் நிபுணர் சர்கார் நெல் அபிவிருத்தி பண்ணை, ஆடுதுரை.]

சாதாரணமாக ஒரு குடியானவனுடைய விரை நெல்லானது நெல் பருமானத்திலும் வயதிலும் மகசூலிலும் வேறுபாடு உள்ள அனேக தினுசுகளில் கலப்பாக இருக்கிறது. இதனால் குடியானவனுடைய நெல்பயிரில் சிறந்த முதல்களும் நடுத்தரமான முதல்களும் கேவலமான முதல்களும் சேர்ந்திருப்பதினால் மகசூல் மிக்கக் குறைவை அடைகிறது. அப்படி மகசூல் குறைவதற்கு விரை நெல்லில் கலப்பேதான் காரணம்.

ஆடுதுரை சர்கார் நெல் அபிவிருத்தி பண்ணையில் செய்து வரும் ஆராய்ச்சிகளினால் உயர்தர மகசூலைக் கொடுக்கக் கூடிய ஏழு தினுசு நெல்கள் காவிரி பாசனமுள்ள நிலங்களில் நாட்டுக் கலப்பு விரைக்கு பதிலாக சாகுபடி செய்வதற்காக பொருக்கப்பட்டிருக்கி

றது. இத்தினுசு நெல்கள் மிகச் சிறந்தவைகளாகக் காணப்பட்டு மிராசுதாரர்கள் அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். இந்த உயர்தரதினுசு நெல்கள் அதிக மகசூலைக் கொடுப்பதுடன் ஏககாலத்தில் அறுவடைக்கு வருகின்றன. இந்த சிறந்த குணங்கள் விரை கலப்பில்லாமல் வைத்திருந்தால் மட்டும் வெளிப்படுமே ஒழிய கலந்து போனால் மகசூல் படிப்படியாக குறைவை அடையும். ஆகையால் அதிக மகசூலை அடைவதற்கு விரையைக் கலப்பில்லாமல் சுத்தமாக வைப்பது அத்தியாவசியம்.

சாதாரணமாய் விரை கலப்பு அடையக் கூடிய சமயங்கள் மூன்று கீழே சொல்லப்படும். அச்சமயங்களில் கலப்பு ஏற்படாமல் பாதுகாப்பது அவசியம்.

1. அறுவடை காலத்தில் நாத்தங்கால்களில் சிந்திக்கிடக்கும் தான்னியங்களை நன்றாக முளைக்கச் செய்து அப்படி முளைத்த முளைகளைக் அழுகச் செய்து பிறகு நாத்தங்கால்களை தயாரிக்கவேண்டும்.

2. நாத்துகளைப்பிடுங்கி நடும் வயல்களிலும் முந்தின அறுவடையில் சிந்தின நெல் தானியங்கள் முளைக்கவைத்து அழியச் செய்வது அவசியம். இதற்கு வயல்களில் இரண்டு தினங்கள் முன்னதாக தண்ணீரை விட்டு சிதரின நெல்களை முளைக்கச் செய்து பிறகு உழுது விட்டால் அப்பயிர்கள் நன்றாக அழிந்து போகும். இது செய்த பிறகு தான் வயல்களை நடுவதற்கு ஒத்தாசை செய்ய வேண்டும். நெல்பயிர் கதிருக்கு வரும் காலத்தில் வயலில் இறங்கி கலப்பு முதலியவைகளை வேறுடன் பிடுங்கி அப்புறப்படுத்தவேண்டும். இப்படிச் செய்வதற்கு (Roguing) கலப்பு எடுப்பது என்று பெயர். இதை விரை எடுப்பதற்கு வேண்டிய மகசூலைக் கொடுக்கக் கூடிய சிறிய வயல்களை மாத்திரம் செய்தால் போதும. 50 ஏகரா நஞ்சை நிலமுள்ள மிராசுதார் ½ ஏக்ராவில் (Roguing) கலப்பு எடுப்பது அனுஷ்டித்தால் அடுத்த வருஷத்திற்கு போதுமான விரை சேகரிக்கக்கூடும்.

3. அருத்த நெல்கதிரின் கோட்டுகளை களத்தில் அடிக்கும் பொழுது களம் மிகவும் சுத்தமாகவும், இதர நெல்கலப்பில்லாமலும், இருக்கவேண்டியது அவசியம். அடிப்பதற்கு முன்னால் களத்தை சுத்தமாகப் பெருக்கி சிதரின தானியங்கள் சேரவிட்டாமல் செய்ய வேண்டும். பிறகு விரை நெல்லை காயப்போடும் பொழுதும் காய்ந்த நெல்லை வாரி வைக்கும் பொழுதும் இதர நெல்லு ஒரு ம கூட கலப்பில்லாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

கிராமப் பஞ்சாயத்துகள்.

சில முக்கியமான குறிப்புகள்.

நன்னிலம் தாலூகாபோர்டு வைஸ்-பிரஸிடெண்டு
ஸ்ரீமான் M. R. சாம்பசிவ அய்யர், B. A.

ஆரம்பப் பள்ளிக்கூடம்.

இந்நாளில் மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவனும், கொஞ்சமாவது எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்பது யாவராலும் ஆக்ஷேபிக்கப்படாத விஷயம். நமது தேசத்தில், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சிறுவனுக்கும் எழுதப்படிக்கத் தெரியும்படி செய்யவேண்டியது பஞ்சாயத்தின் கடமை. தாலூகா போர்டுகளுக்கு நமது வரியோடு ஒரு சிறு தொகையை வசூல் செய்து கொடுத்து, நமது சுமக்கமுடியாத வரிப்பணத்தின் ஒரு சில்லரை வீதம் ஒன்று கொடுத்தும், தானாக உபாத்தியாயர்களோ, மற்றவர்களோ ஏற்படுத்தும் கலாசாலைகளுக்கு ஒரு ஸ்வல்ப தொகை கிராண்டு என்று கொடுத்து, படிப்பின்மை ஒழியவேண்டுமென்று, ஸர்க்கார் மனப்பால் குடிப்பது ஸாத்தியமில்லாத காரியம். டீச்சர் மானேஜர்களுக்கு கொடுக்கும் சிறுதொகையில் அவர்கள் காலக்ஷேபம் செய்வது ஸாத்தியமில்லை. இலவசக் கல்வி நிறைந்த இந்நாளில் சம்பளமில்லாமல் ஏற்பட்டிருக்கும் போர்டு ஸ்கூல்களைப் பார்த்துக் கொண்டு இவர்களுக்கு மாணாக்கர்களிடம் சம்பளம் கிடைப்பதில்லை. ஆகையால் உதவிபெறும் பாடசாலைகளில் நூற்றுக்கு 99 ஒழிந்த வேளைகளில் பள்ளிக்கூடம் நடத்துகின்றார்கள் அவைகளில் படிக்கும் மாணாக்கர்கள் பெரும்பாலும், பள்ளிபோவது நின்றதும், எழுத்து வாசனையில்லாதவர்களாகிறார்கள். இப்பள்ளிக்கூடங்கள் சரிவர நடக்கிறதா என்று மேற்பார்வையிட தாலூகாவுக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தாலூகாபோர்டில் உதவிபெரும் பாடசாலைகளும் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களும் 210 இருக்கின்றன. மொத்தம் ஸ்கூல்நடக்கும் தினங்கள் 200-க்குட்பட்டிருக்கும் இவர் வருஷத்திற்கு ஒருமுறை கலாசாலை தரிசனம்பண்ணுவது சிரமஸாத்தியமாயிருக்கும். ஆகையால் மேற்பார்வையால் உதவி பெறும் பாடசாலைகள் திருந்தப்போவதுமில்லை. அந்த உபாத்தியாயர்களுக்கு வருமானத்தை உயர்த்தி, பக்கத்திலுள்ளோர் கவனிப்பும், மேற்பார்வையும் ஏற்பட்டாலொழிய அந்தப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்ட காரியங்களைச் சரிவர நடத்தமுடியாத நிலைமையில்தானி

ருக்கும். G. O. 1424 of 8th October 1923 பஞ்சாயத்துகள் இவ்வித பள்ளிகளை மேற்பார்க்க அநுமதிக்கிறது. அதை எயிடட் ஸ்கூல் இருக்கும் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். உபாத்தியாயருக்கு காலக்ஷேபத்திற்குத் தகுதியாய் வருமானம் உண்டுபண்ணிக் கொடுக்கவேண்டும் தாலூகாபோர்டுகள் பள்ளிக்கூட மேற்பார்வையையும் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கலாம். அந்த அதிகாரத்தையும் தாலூகாபோர்டு ஸ்கூல்கள் இருக்கும் கிராமத்திலுள்ள பஞ்சாயத்துகள் பெற்று உதவிபெறும் பாடசாலைகளும், போர்டு பாடசாலைகளும் நடைபெறும் படிக்கும், இந்த பள்ளிகள் எதற்காக ஏற்பட்டு, பொதுமக்கள் பணம் செலவழிக்கப் படுகின்றனவோ அக்காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று கவனித்து, தவறுகளை அந்தந்த அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்த 2 விதமான பள்ளிகள் இல்லாத இடங்களில் ஸர்க்காரில் பஞ்சாயத்துகள் தங்கள் எல்லைக்குள் பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தினால் ஒரு உபாத்தியாயருக்கு வருஷத்துக்கு 80ரூ. கிரான்டும் பள்ளி ஏற்படுங்கால் தளவாட சாமான்களுக்காக ரூ. 80 கிரான்டையும் கொடுத்துதவுகிறார்கள். பஞ்சாயத்துகள் செய்யவேண்டியதென்னவென்றால் உபாத்தியாயர் சம்பளத்திற்காகவும் இதர பள்ளிக்கூடச் செலவுகளினாலும் ஆகக்கூடிய தொகைகளில் கிரான்டு ரூ. 180 போகப் பாக்கித்தொகையை பஞ்சாயத்து நிதியிலிருந்து செலவழிக்க ஒப்புக்கொள்ள வேண்டும் கிராமத்தில் எல்லா வகுப்பாரும் வரக்கூடிய பொது இடத்தில் பஞ்சாயத்துச் செலவில் ஒரு கட்டடம் கட்டிக்கொடுப்பதாகவோ அல்லது பஞ்சாயத்துச் செலவில் வாடகைக்கு அமர்த்தி வைப்பதாகவோ ஒப்புக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்தில் உபாத்தியாயரை நியமித்து அவர் ஸரிவரப்பள்ளியை நடத்திவருகிறாரா என்று அடிக்கடி கவனித்து, கிராமத்திலுள்ள படிக்கக்கூடிய ஒவ்வொரு சிறுவனும் பள்ளியில் சேரும்படி தூண்டி பள்ளியில் சேர்க்கவேண்டும். பஞ்சாயத்துப் பாடசாலைகளில் மற்றவைகளை விட நன்றாக நடக்கக்கூடிய எல்லா ஸௌகரியங்களும் இருக்கின்றன. கிராமவாஸிகளுடைய மதாச்சாரங்களுக்குத் தக்கபடி விடுமுறைகள் முதலியன விடலாம். குழந்தைகளின் பெற்றோர்களிலேயே சிலர் கவனிப்பார்களாகவும் இருக்கக்கூடியதை முன்னிட்டு ஸ்கூல் செவ்வனே நடப்பதில் ரொம்ப தொகை உள்ளவர்களுடைய ஆதிக்கத்தில் நடப்பதால், இப்பள்ளிகள் சிறுவர்களுக்கு பயன்கொடுத்தே தீருமென்பதை ஊகிக்கலாம். ஆகையால் ஆரம்ப பாடசாலை இல்லாத ஒவ்வொரு பஞ்சாயத்தும்

ஒரு பஞ்சாயத்து ஸ்கூல் ஏற்படுத்திக்கொண்டு கிராமத்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி செய்ய வேண்டுவது பஞ்சாயத்துகளின் கடமைகளில் ஒன்றாகும்.

வாசகசாலையும், பொது இடமும்.

கிராமவாசிகள் அனைவரும் படிப்பில் முதிர்ச்சி அடைந்தவர்களாயிருப்பது ஸாத்தியமன்று. ஆனால் படிப்புத் தெரியாதவர்களும், நமது புராணங்களையும், மேலான கிரந்தங்களையும் தற்காலத்தில் உலகத்தில் பலதேசங்களில் நடக்கும் வர்த்தமானங்களையும் படிக்கக் கேட்டாவது தங்கள் புத்தியையும், நோக்கத்தையும் விசாலப்படுத்திக் கொள்ளவேண்டும். தேச க்ஷேமத்தைக் குறித்து ஒவ்வொருநாளும் அவரவர்கள் வேலை முடிந்து ஓய்வுநேரத்தில் ஓரிடத்தில் கூடி கிராம காரியங்கள், வெளி வர்த்தமானங்கள் கலந்து பேசவும், யாராவது நன்றாகப் படிக்கக்கூடியவர்களைக் கொண்டு தினசரிப் பத்திரிகைகளையோ, புண்ய கதைகள் புராணங்களையோ படிக்கச்செய்து சற்று நேரம் கேட்பதென்றும் ஸம்பிரதாயம் கிராமங்களில் ஏற்பட்டால் கிராமங்களில் தோன்றும் கக்ஷிபேதங்கள் ரொம்பவும் ஒழியும். எல்லோரும் ஓர் இடத்தில் கூடுவதென்றால் கிராம ஊழியர்கள் முதலியோர் பஞ்சாயத்தாரிடம் தெரிவிக்க வேண்டுவனவைகளோ அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்ள வேண்டியவைகளோ. கிராமத்தில் பலபேருக்குத் தெரிவதால் எல்லாருக்கும் கிராம நிர்வாகத்தில் தனக்கும் சம்பந்தமுண்டென்று அன்றன்று புத்தியில் படுவதோடு தினந்தோறும் மேல் எவ்விதம் நடத்தினால் கிராமம் முன்னேற்றமடையுமென்பதை கிராமத்தார் சிந்தனைசெய்யவும் கலந்து யோசிக்கவும், காரியசித்திபெறவும் பிரமேயங்களுண்டு. மேனாடுகளின் மாதிரி நம் நாட்டில் எல்ஹவுஸில் கூடுவது ஸம்பிரதாயமில்லை. மதுபானத்தின் பிறகு யோசனை பண்ணும் பழக்கமுமில்லை. அநேகமாய்க் கிராமந்தோறும் மடங்கள், சாவடிகள் உள்ள அவைகளிலேயே அஸ்தமனத்திற்கு அனுஷ்டானமும் பிறகு 1 மணி நேரம் மேற்சொன்ன விதம் சமூகவாழ்க்கையை விருத்திசெய்வது பொருந்தும். மடங்கள், சாவடிகள் இல்லாதகிராமங்களில்குளத்தங்கரைக்கு ஸமீபத்தில் ஒரு கட்டடம் ஏற்படுத்துவது அவசியம். அவ்விதம் ஏற்பட்டால் ஜனங்கள் அங்கு நித்ய விதிகளுக்கு வருவது அத்யாவசியமானபடியினால் அப்படியே சற்று தங்கி வாசகசாலையை உபயோகப்படுத்துவதுடன் ஏனைய கிராமத்தாருடன் கூடிக்கலந்து பேச தருணம்வாய்க்கும்.

பஞ்சாயத்து பாடசாலை உள்ள கிராமமாயிருந்தால் பாடசாலை அதில் வைக்கும்படிக்கும் வெளியில் கிராமத்தார் கூடிப்பேசும்படிக்கும் உள்ள வஸதிகளோடு கட்டடத்தை அமைத்து அதிலேயே வாசக சாலையும் ஏற்படுத்தலாம். பஞ்சாயத்து ஆபீஸும் அதே கட்டடத்தில் இருக்கும்படி செய்யவேண்டும். எந்தவிதத்திலும் ஒரு பொது இடத்தை நிர்மாணித்து அதில் ஒரு லைப்ரரி புத்தகசாலையும், வாசக சாலையும் ஏற்படுத்தல்வேண்டும். ஓர் வாசகசாலைக்குக் கிராமத்தில் தனிப்பட்ட ஹோதாவில் பிரமுகர்கள் வரவழைக்கும் தினசரி பத்திரிகைகளை உபயோகத்திற்களிக்கும்பொருட்டு கேட்டுப்பெறலாம். வாசிக்கக்கூடியவர்களெல்லாம் ஆளுக்கு சில அணாக்களுக்கு மேற்படாமல் உதவி செய்து மொத்தத்தில் பத்திரிகைகள் வாசக சாலைக்கு வரவழைக்கலாம். பத்திரிகைகளைப் படித்தபின் கடிதமாய் விற்று அதே நிதியில் சேர்த்துக்கொள்ளலாம்.

புத்தகசாலைக்கு, ரொக்கமாகவோ அல்லது புத்தக ரூபமாகவோ எந்த பஞ்சாயத்தில் 200க்கு மேற்படாமல் ஒரு தொகை உதவிசெய்யப்படுகிறதோ அந்த பஞ்சாயத்திற்கு ஸர்க்காரில் அத்தொகைக்குச் சமானமான ஒரு தொகைக்கு புத்தகம் நாம் கொடுக்கும் ஜாப்தாபடி ஸப்ளை செய்கிறார்கள். இவ்விதம் கிராண்டுகளைப்பெற்று புத்தக சாலையை விருத்தி செய்வோமானால், நல்ல புத்தகங்கள் கிராமத்தில் எல்லோருக்கும் படிக்கக் கிடைப்பது மாத்திரமன்று, நல்ல புத்தகங்கள் எழுதுவோர்களையும் அச்சுப்போடுகிறவர்களையும் நாம் ஆதரிப்பவர்களாவோம். இது சுலபமாய் ஒவ்வொரு பஞ்சாயத்தும் செய்யக்கூடிய விஷயம்.

(கிராமாநுகூலன்.)

காப்பி குடிப்பவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. காப்பிக்குடி நம்முடைய தேசத்திற்கு அவசியமானதல்ல. ஏனென்றால், நமது முன்னோர்கள் இதை எப்போதும் உபயோகித்ததே கிடையாது.

2. குளிர் விசேஷமாய் இருக்கப்பட்ட தேசங்களில் ஜனங்களுக்குச் சாதாரணமாய் மலச்சிக்கல் இருப்பதால், அதற்குக் காப்பிக் கஷாயத்தை உபயோகிக்கிறார்கள்.

3. காப்பிக்குடியானது தேகத்திற்குக் கெடுதி செய்யக் கூடிய ஒரு (luxury) கொடிய செய்கையாகும். இது தேகத்திற்கு

அசௌகரியத்தை உண்டாக்கி, நாளாவட்டத்தில் நீர் சம்பந்தமான வியாதியையும் இதர வியாதிகளையும் உண்டாக்குகிறது.

4. பிராய வயதுள்ளவர்களுக்கு தேகத்தில் பலமிருப்பதனால் காப்பிக்குடியினால் உண்டாகும் கெடுதி தோன்றுகிறதில்லை. வயது முதிர்ந்து விருத்தாப்பியதசை வந்தபின் அதன் கெட்ட குணங்கள் புலப்படுகின்றன.

5. காப்பிகுடிக்கும் யௌவன ஸ்திரீகளின் குழந்தைகளுக்குப் பகவானால் கொடுக்கப்பட்ட அமிர்தத்துக்குச் சமானமான தாய்ப் பாலைக் கொடுக்கச் சக்தியில்லாமல், பணத்தைச் செலவு செய்து புட்டிப்பாலைக் கொடுக்க நேரிடுகின்றன.

6. காபி குடிக்கும் பிள்ளைகள் சரியாகச் சாப்பிடுகிறதில்லை. அதனால் வயிற்றுக்குத் தகுந்தபடி திடமாயும் பலமாயுமிருக்கிறதில்லை

7. காபிக்குடியினால் சாதாரணமான குடும்பங்களில் ஆறில் ஒருபங்கு வருமானம் செலவாகி விடுகிறது. கல்யாணங்களில் சாப்பாட்டுக்காகச் செலவாகும் மொத்தத்தில் 100க்கு 25க்குக் குறையாமல் காப்பிகுடிக்குச் செலவாகிறது.

8. காப்பிக்குடியின் கெட்டவழக்கத்தினால் அநேக நடுத்தரக் குடும்பங்கள் எழ்மைத்தனத்திற்கு வந்துவிட்டன இவர்களுடைய கடன் வருஷந்தோறும் அதிகரித்துகொண்டே வருகின்றன.

9 காப்பிக்குடி பிரபலமான பின்பு, நெய் வெண்ணெய் முதலான ஆகாரவஸ்துக்களுக்குப் பஞ்சம் அதிகரித்துவிட்டது. நெய்யின் விலை 1க்கு 3மடங்கு அதிகரித்துவிட்டது.

10. எல்லா மனிதர்களுக்கும் மூளையை விருத்திபடுத்துவதற்கு நெய் முக்கியமான வஸ்துவாதலால் இதுபோதுமான அளவு எல்லோரும் வாங்ககூடிய விலைக்குக்கிடைக்காததினால், உலகத்தில் நாளுக்குநாள் ஜனங்களின் மூளையின் வலுவும் குறைந்து கொண்டே வருகிறது.

11. கட்குடியும், காபிக்குடியும் இரண்டும்ஒரேமாதிரி (Stand on the Same bar) என்று சொல்லலாம். கள்ளை விசேஷமாய்க் குடித்து, ஸ்மரணை தப்பித் திரிவதனால் கிரிமினல் கோர்ட்டுகளில் அபராதம் விதிக்கப்படுகிறான். காபி விசேஷமாய்க் குடிப்பதினால்

வைத்தியர்களுடைய பில் (Doctor's Bills) களுக்கு ஏராளமாய்ப் பணம் கொடுக்கவேண்டியது நேரிடுகிறது.

12. விசேஷமாய் காபிக்குடியினால் அஜீரண சம்மந்தமான வியாதி உண்டாகிறது.

13. காபிக்குடியினால் நரம்புகளுக்கு அனாவசியமான உத்திரேகத்தை உண்டாகி, நாளாவட்டதில் தேக தத்துவத்தைக் கெடுத்துப் பலஹீனத்தை உண்டாக்குகிறது.

14. காபிக்குடி எங்கும் பிரபலமான பின்பு, பட்டணங்களில் பால் விற்பவர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு பசுமாடுகளிலிருந்து பாலை ஒட்டக் கறந்து விடுவதினால் கன்றுகளுக்குத் தாய்ப்பாலில்லாமல் க்ஷீணித்துப்போவதினால் விவசாயத் தொழிலுக்கு முக்கிய தேவையான கால்நடைகளின் சங்கியை வருஷாவருஷம் குறைந்து கொண்டே வருகிறது.

ஆகையால் வீண் செல்வுக்குக் காரணமானதாயும், தேகாரோக்கியத்தைக் கெடுக்கக்கூடியதாயும், குடும்பங்களைக் கடனுக்குள்ளாக்குவதும், ஜனங்களுக்குப் பலஹீனத்தையும், நீர்வியாதி முதலான வியாதிகளை உண்டாக்கக்கூடியதாயும், கால் நடைகளின் சங்கியை குறைவதற்குக் காரணமாயிருப்பதுமான இந்த கெட்ட வழக்கத்தை நிருத்தவேண்டுமென்று காப்பி குடிக்கும் புருஷர்களையும் ஸ்திரீகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

(கம்மபாலன்)

நமது நாட்டின் தெளர்ப்பாக்கிய நிலைமை.

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப் பண்டிதர், சித்தூர்.

199372

நமது தாய் நாடாமிப் பாரதநாடு மிகமிகச் சீரும் சிறப்பும் வாய்ந்து திகழ்ந்த தெய்விக நாடென்று பெரியோர் பலர் பேசியிருக்கின்றனர். ஒருகாலத்தில் மிக்க உயர்வுபெற்று விளங்கியது இந்த நாடு. அரசாட்சி முறையிலும், வியாபாரத்துறையிலும், வேளாண்மைத் தொழிலினும், தெய்வபக்தியிலும், தத்துவ ஞானத்திலும், கல்வி யறிவிலும், சௌரியத்திலும், போர்த்திறமையிலும், ஜீவகாருண்யத்திலும், சகோதரத்துவத்திலும், ஒற்றுமையிலும் இது ஒப்பற்று விளங்கியதென்பது பண்டைய நூல்களாலும், அக்காலங்களில் யாத்திரீகர்களாக வந்த அன்னிய நாட்டினர்களெழுதிவைத்துள்ளவிருபங்களாலும் விளங்குகின்றது. தற்போது கண்கூடாகக் காணக்கூடிய சிற்சிலவற்றைக் கொண்டும் நம்நாடு பண்டைக்காலத்தில் இப்படித்தான் இருந்திருக்கவேண்டுமென்று அனுமானித்தறியவும் இடமுண்டு. ஆயினும் பண்டைக்கால நிலைமையைப்பற்றிப் பேசிப் பயன் யாது? அவ்வாறு உன்னத நிலையிலிருந்த நாடு—நமது தாய் நாடு—நமது நன்னாடு—பொன்னாடு—பொன்னாட்டினும் சிறந்த இந் நாடு—'நான் இந்தியாவில் இந்தியனாகப் பிறந்ததற்காக உண்மையிலேயே மிகப் பெருமையடைகிறேன்' எனப் பெரியோர் பலராலும் பேசப்பெற்ற நாடு—சகோதரர்களே! சகோதரிகளே; தற்போது எந்தநிலைமையிலிருக்கின்றதென்று சிந்தித்துப் பாருங்கள். அந்தோ! நினைத்தால் நெஞ்சம் கலங்குகின்றது. எழுதுவோமெனில் கை நடுங்குகின்றது, இறகும் நடுங்குகின்றது. 'வாழ்ந்தவன் கெட்டால் வறுக்கும் சட்டிக்கும் உதவான்' என்று ஓர் பழமொழியுண்டு. அது நம் நாட்டளவில் பலித்து விட்டது.

இந்நிலைமையில் இதன் பூர்வ ஸ்திதியைப்பற்றிப் பேசிப் பெருமை பாராட்டுவோமானால் அது பரிகாசத்திற்கே யிடமாகும். "என் தகப்பனார் தாசில்தாராயிருந்தார், என் பாட்டன் உயர்தர நீதி

மன்றத்தில் நியாயாதிபதியாக விருந்தார், என் பூட்டன் பெரிய ஜமீன்தாராக விருந்தான். இத்தகைய சிறந்த குடும்பம் எனது குடும்பம். ஐயா! பசி பிராணனை வாட்டுகிறது. ஒரு காலணு பிச்சை கொடுங்கள். பட்டாணி வாங்கித் தின்று பசியாறுகிறேன்." என்று ஒருவன் கேட்டதாக ஓர் கதையுண்டு. இக்கதையையே ஒக்கும் பண்டைய நிலைமையைப் பேசுவது.

நமது வியாபாரமெங்கே? வேளாண்மை யெங்கே? மாதமும்மாரி எங்கே? தெய்வபக்தி எங்கே? வேதாந்த விசாரணை எங்கே? மதாசாரியர்கள் எங்கே? நல்லொழுக்க மெங்கே? ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஜீவகாருண்யமு மெங்கே? ஒன்றுங் காணோமே! எல்லாம் சூனியமாய் விட்டனவே! அந்தோ! இவைகளுக்குப் பதிலாக பஞ்சமும் பசியும் தரித்திரமும் நாஸ்திகமும் வேற்றுமையும் துவேஷமும் தீயொழுக்கும் தலைவிரித்துத் தாண்டவம் புரிகின்றனவே. நம் தாய் தவிக்கிறாள். கண்ணீருங் கம்பலையுமாய்க் கதறுகின்றாள். உண்ண வுணவும் உடுக்க உடையுமின்றி வாடுகிறாள். தன் மக்களின் பரிதாப நிலையைக் கண்டு பரிதபிக்கிறாள். தன் முன்னைய உன்னதத்தை யெண்ணி யெண்ணி யேங்குகின்றாள். என் செய்வாள். கால சக்கரம் அவளை இக்கோலத்திற்குள்ளாக்கி விட்டது. அவள் சுதந்தரமற்றாள். அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்து கிடக்கிறாள். தன் தாய்க்குத் துன்பமுண்டாக்கிய நிமித்தம் சத்திரியர்களைக் கருவறுத்த பரசுராமன்போலத் தனது சேமத்தினிமித்தம் பிராணனையும் விடத்தக்க—தன் சுகத்தின் பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தஞ் செய்யதக்க—'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்றபடி மானத்தையே பெரிதாக் கொண்ட—உத்தமபுத்திர ரத்தினங்களால் சிறப்புற்றிருந்தாள். எல்லோரையுமிழந்தாள். இப்பொழுதும் அத்தகைய புத்திரர்களை அவள் பெருமலில்லை. பெற்றிருக்கின்றாள். அவர்களும் தம் தாயின் நன்மையையே தம் நன்மையாகக்கொண்டு உழைத்தார்கள்; உழைத்துக்கொண்டு மிருக்கின்றனர். எனினும், அந்தோ! அவர்கள் முயற்சிகள் யாவும் அவலமாயின. ஆற்றிற் கரைத்த புளியாயின.

மற்றைப் பிள்ளைகள்—பெருந் தொகையினராகவுள்ள பிள்ளைகள் ஒற்றுமையில்லாமல்—சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையென்பதை யுணராமல்—சண்டையிட்டுக்கொண்டு திரிகின்றனர். இதுவே அவளது அகத்தைப் பெரிதும் அலைக்கழிக்கின்றது. தன் பிள்ளைகள் ஒற்றுமையில்லாதவர்களாய் ஒருவர்மீதொருவர் பகைமை கொண்டு போராடிக்கொண்டிருப்பார்களாயின், அதைக் கண்டு எந்தத் தாய்தான் சிந்தை கலங்காதிருப்பாள். ஐயோ! எனக்கு உணவும் வேண்டா. உடையும் வேண்டா. சீரும் சிறப்பும் வேண்டா. அடிமை வாழ்க்கையைப்பற்றிக்கூட எனக்கு அக்கறையில்லை. என்மக்கள் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தால் அதுவே எனக்குச் சகலபாக்கியங்களும் என்பதே அவளது தற்கால முறையீடு.

ஒரு நாட்டின் மேன்மைக்கு முக்கிய சாதனங்களாக விருப்பவை வேளாண்மை கைத்தொழில் வியாபாரம் ஆகிய இம்மூன்றுமேயாம் இம்மூன்றும் எந்நாட்டில் செவ்விதின் நடைபெறுமோ அந்நாடே நன்னாடாம். நம் நாட்டில் இவை மூன்றும் ஓங்கியிருந்தவரையில் நாடும் ஓங்கியிருந்தது. இவை தாழ்ந்துவிட்டதே நாட்டின் தாழ்மைக்கு—தரித்திர நிலைமைக்குக் காரணமாயிற்று.

வேளாண்மை:—'மேழிச்செல்வம் கோழைபடாது' 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்பவை ஆன்றோர் அனுபவமொழிகள். சீரைத்தேடின் ஏரையே தேடவேண்டும். இப்பயிர்த்தொழிலுக்கு, மழை—கால மழை—அதிவிருஷ்டி அனாவிருஷ்டி என்னும் தோஷங்களின்றி சமவிருஷ்டி—அத்தியாவசியம். மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மாரியல்லது காரியமில்லை. இத்தகைய சிறப்புடையதாகிய மழையில்லை. மாரி வளங் குன்றிவிட்டது. பயிர்கள் வானம் பார்த்த பயிர்களாய் வாடுகின்றன. வேளாண்டொழிலினர் அப்பயிரைப்போலிருக்கின்றனர். காலமழை கிடையாது. அகாலத்தில் பெய்கிறது. அதை நம்பிக் கஷ்டப்பட்டு உழுது விதைத்துவிட்டால் பின்பு

ந்துபார்த்துத் தலைமேல் கைவைத்துக்கொண்டு 'முறையோ வானதேவுடா' என்று வேண்டியதாய்விடுகிறது. மக்கள் தண்ணீர் தண்ணீர் என்று (குடி தண்ணீர்க்கும்) தவிக்கின்றனர். இந்த நிலைமையில் வேளாண்மை எப்படி விருத்தியாகும்? குடிகள் குடிக்கக் கூழின்றி வாடுகின்றனர். நிலமதிப்பு குறைந்து விட்டது. பொருளுற்பத்தி பூச்சியமாய்விட்டது. ரூபாய் ஒன்றுக்குப் பதினான்கு பதினைந்துபடியாக விற்ற அரிசி மூன்றுபடிக்கு வந்துவிட்டது. ஒரு வீசை மூன்றணாவாக விருந்த மிளகாய் ஒரு ரூபாயாய் விட்டது. இப்படியே எல்லாப் பொருள்களும் ஒன்றுக்கு நான்கு மடங்கு ஐந்து மடங்கு விலையேறிவிட்டன. ஏழைகள் எப்படி சீவிப்பார்கள். பெண்டு பிள்ளைகளுடன் கப்பலேறுகிறார்கள். பினாங்கு சிங்கப்பூர் சிலோன் முதலிய நாடுகளில் சென்று பாழும் வயிற்றின் கொடுமையால் படாதபாடு படுகின்றனர். கூலிக்கார நாடு என்னும் பட்டம் நம் நாட்டிற்குக் கிடைத்துவிட்டது. பிச்சைக்காரர் பெருகிவிட்டனர். தெருப்பிச்சை, கடைப்பிச்சை, ரயில்வண்டிப்பிச்சை, கோயில்பிச்சை, திருவிழாப்பிச்சை அங்கும் பிச்சை, இங்கும் பிச்சை, எங்கும் பிச்சை மயமாய்விட்டது. ஏற்பதிகழ்ச்சி என்பது ஏட்டளவில் நின்றுவிட்டது.

(ஆனந்தபோதினி)

A Disease in Betel-Vine.
வெற்றிலைக் கொடியை வாடவைக்கும் நோய்.

பூந்தமல்லியைச் சுற்றி ஏராளமாய் வெற்றிலைக் கொடிக்கால் இருக்கின்றன. இந்த கிராமமானது பட்டணத்துக் கருகில் இருக்கிறது. இவ்வூர் மண் உயர்ந்த வெற்றிலை சாகுபடிசெய்ய பொருந்தி இருக்கிறது. இந்தப் பயிருக்கு தள்வாடங்கள் அதிக சிலவாகுமாகையால் சொல்ப விஸ்தீரணத்தில் மாத்திரம் பயிர் செய்ய முடியுமாதலாலும், வருஷம் பூரா மாசூல் கிடைத்து நல்ல லாபம் கிடைக்

கிறபடியாலும் இந்த வெத்திலைக்கு பட்டணத்திலும், அதன் சுற்று ஊர்களிலும், எப்பொழுதும் தேவை இருந்தாலும், இதுபோன்ற காரணங்களால் பூந்த மல்லியிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களில் லாபகரமாயும் நாளுக்கு நாள் விருத்தியாகின்ற இத்தொழில் ஸ்திரமாய் நடக்கிறது.

இந்தப் பிரதேசத்தில் வெற்றிலைக்கொடிகளில் சிறிது காலத்திற்குமுன் ஓர் கடும்நோய் உண்டாயிற்று. மூன்று வருஷத்திற்கு முந்தியே இவ்விதநோய் இருப்பதாய் தெரிந்திருந்தும், இந்நோயால் அதிக கொடிகள் செத்துப் போகாமலும், நஷ்டம் கொஞ்சமாயிருந்தபடியால் குடிகள் இதைப்பற்றி உண்மையில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. சென்ற மழை காலத்தில் இந்தநோய் கடுமையாய்க்கண்டு, அநேக கொடிகள்பட்டுப்போய் விட்டபடியால் பெரும் நஷ்டம் கொடிக்கால்காரர்களுக்கு உண்டானதால் இதைப் பற்றி நினைக்கும்படி நேர்ந்தது. தோட்டத்துக்குத் தோட்டம் இந்நோய் பரவி, கொடிகள் அதிகமாய் காய்ந்ததும், குடிகள் பயந்து அங்குள்ள நிலைமையை 1927-ம் வருஷம் அக்டோபர் மாதம் கவர்ன்மெண்ட் பூசண சாஸ்திரிக்கு அறிவித்தார்கள். உடனே அந்த இடத்தில் பரிசோதனை செய்து கொடிகள் செத்துப் போவதற்குக் காரணம் இரண்டுவித நோய்களென்றும், அவைகள் கொடிகளின் வேர்வரிசைகளிலும், கொடிகளின் கழுத்திலும் தாக்கி கொடிகளின் சத்தைக் கொண்டு வளரும் பூசணமென்று கண்டார்.

நோயின் உடையாளங்கள் :—முதல் நோய் மற்றொன்றைவிட அதிகமாகப் பரவியிருக்கிறது. இதில் இலைகள் ஒட்டிப்போய், மெதுவாகி, வாடிப்போய், மஞ்சள் நிறமாய் மாறி, கடைசியில் ஒரு வாரம் அல்லது அதற்குள்ளாவது செடி காய்ந்துபோகிறது. காய்ந்து கொண்டிருக்கும் கொடியை அதன் கழுத்துக்கருகில் சோதித்தால் கறும் தண்ணீரால் நனைத்த புள்ளிகள் காணப்படுகின்றன. இவைகள் மெதுவாய் அழுகிப்போய் தண்டு பூரா உதிர்ந்துபோகிறது. இந்தப் பூசணம் சௌக்கியமாயுள்ள தண்டில் நுழைந்து உள்ளிருக்

கும் வஸ்துக்களைத் தின்றுவிடுகிறது. அதனால் கொடி அழுகி செத்துப்போகிறது. மற்றொரு நோய் இதைப்போலும், இதற்கதிகமான கொடுமையானதும், அதி விஸ்தீர்ணத்தில் பரவாமலுமிருக்கிறது. சில தோட்டங்களில்தான் இருந்தது. இது குடிகளுக்கு முந்தியே தெரியும். இதை பூர்ணம் என்று அந்த ஊரில் சொல்லுகிறார்கள். இது கடைசியில் மற்ற நோயைப்போலவே இருந்தபோதிலும் இது தாக்கும் விதம் வேறு: இது பூமியில் புதைத்திருக்கும் சுற்றின தண்டில் கண்டு, செடி முழுவதையும் மூடிக்கொள்வதாகிய வெள்ளை பூசணத்தால் நன்கு விளங்கும். நோய்தாக்கிய இடங்கள் அழுகி சீக்கிரத்தில் துணுக்குகளாகிறது. செடிக்கும் வேருக்கும் சம்பந்தம் அற்றுப்போகவே செடி காய்ந்துபோகிறது.

இதைத் தடுக்கும் முறைகள் :—இரண்டு வித பூசணங்களும் மண்ணுக்குள் இருந்து ஈரம் அதிகமாயுள்ளபோது விருத்தியடைகிறது. கொடிக்கால் சாகுபடி செய்யும் முறைகள் வெகு அபிவிருத்தி அடைந்திருந்தும், இவ்வித நோய்கள் பரவும்படி ஏற்படுவது சில அரிய விஷயங்களைக் கவனிக்காமலிருப்பதால்தான். முதலாவது ஒரே நிலத்தில் மாறி மாறி சாதாரணமாய் வெற்றிலையே போடுகிறார்கள். வெற்றிலைக் கொடிகளில் மட்டும் காணும் இந்தப் பூசணங்கள் வருஷா வருஷம் யாதொரு தடையுமின்றி விருத்தியாவதற்கு சௌகரியமிருக்கிறது. இப்பயிர் நெல் அல்லது கரும்போடு மாறி மாறிப் போடும் பக்ஷத்தில், இந்தப் பூசணம் தன்னைப் போஷிக்கும் செடியில்லாததால் சுண்டிப் போகும். மறுபடி வெற்றிலைப் போடும்போது அவற்றில் இப்பூசணம் தாக்குவது சொல்பமாகும்.

இரண்டாவது, இந்தப் பூசணம் தண்ணீரில் கிடக்கும் அவயவ அமைப்புள்ளதால் இதைத் தடுப்பதற்கு வடிகால் முக்கிய விஷயம். கொடிகள் வளர எவ்வளவு தண்ணீர் அத்தியாவசியமோ அவ்வளவு மட்டில் பாய்ச்சி கிடங்குகளையெல்லாம் வற்றப்போடவேண்டும். பருவ காலத்து மழை நின்றதும், வாய்க்கால்களில் தண்ணீர் அதிகமாயில்லாதபோது குடியானவர்கள் கிடங்குகளில் இறைப்பதற்கு தண்ணீர் கட்டிவைப்பது வழக்கம். இது கெட்ட வழக்கம். ஏனெனில், வடிகாலற்றுப்போய் இவ்வித பூசணங்கள் விருத்தியாகும் சாதனங்கள் ஏற்படுகின்றன.

(இந்திய வியவசாயம்)

கேஸரியின்

"லோத்ரா"

கர்ப்பாசய ரோக நிவாரணி.

இதனுபயோகத்தால்குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி யென்றும் அதி சிரேஷ்டமான ஔஷத மென்றும், விலையில்லாத ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள் ருதுசூலை, அகால பஹிஷ்டை ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரக்தப் போக்கு கர்ப்ப ஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்ப விரணம், ருது சூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோபோவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபந்தகம், இருமல் உப்பஸம் மேஹஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ரா வினுபயோகத்தால் வெகு நிம்பகமாய் நிவர்த்திக்கப்படும்.

இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3—0—0
சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10—0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை

தந்தி விலாசம் 'கேஸரி' மதராஸ் | எழும்பூர், மதராஸ் டெலிபோன்
பிராஞ்சு, பெங்களூர் சிடி 3486

டாக்டர் 'ஜீ' பீ என்பவரின் சுகந்த மூக்குத்தூள்!

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன.

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சுண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும் காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.

REGISTERED TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்

தபாற் பெட்டி நெ. 510 விலாசம் "மெடிகேடெட்" | பார்க் டவுன், சென்னை

எங்கே ப்ளேகெங்கே, ப்ளேகில்லவேயில்லை.

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அநுதினமும்
உபயோகப்படுத்தினல் ப்ளேக் ஜவரம், ப்ளேக்
கட்டிகள் கூட கிட்ட நாடமாட்டாது.

குளிர்ஜ்வரம், முறைக்காச்சல் ஜன்னியோடு,
உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித
ஜ்வரங்களுக்கு ராமபாணம்

எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கியப்ரசித்தி

இண்டியா, பர்மா, சிலோன், ஏடன் முதலிய இடங்களில்
30 வருஷமாய் அனேக ஆயிரம் பிரயாணிகள்
ப்ளேகிலிருந்து காப்பாற்றப்படுவதே.

ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானகமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சததௌதக்ருதமும்

ஷை	பெரியசெட்	1 க்கு 2—2—0
	சிரியசெட்	1—6—0

பாகிங் போஸ்டேஜி பிரத்தியேகம்.
கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனமாக அனுப்பப்படும்.

வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு

அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

ஆயுர்வேத ஆசிரமம்
154, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

199372

தந்தி விலாசம்
"பண்டிட்"
மதராஸ்.

டெலிபோன்
நெ. 287, மதராஸ்

ஏஜண்டுகள் தேவை.

PLANT QUETTA FRUIT TREES.

Almond Walnuts, Pomegranates, Pistachio Re. 1. each; Almond Kaghzi, Peaches, Nectarines, Greengages, Apples, Apricots, Muskati Grapes Re. 1-8 each; Cherries —White heart Rs 3-8. Early Rs 3 each; Figs Grapes seedless and assorted Annas 12 each; English Apples Apricots, Pears, Nectarines Rs. 2 each. Packing and Freight extra. Register orders now.

Fresh & Dry Fruits

Fresh English Rosy Peaches, Pears, Plums, Apples, Nectarines Grapes long and seedless, Greengages 7 lbs. Rs 8 in July; Dried Fruits 12 varieties 9lbs Rs 9 Mashed Handkerchieves Rs. 3-8 each Delivered free per V. P. P. Price list sent tree. Tele:—"Mewa."

குவெட்டா பழவியாபார ஏஜன்ஸி குவெட்டா V (இந்தியா)

பழங்களை வேண்டிய மட்டில் புஜித்து தென்புடன் இருங்கள்.

புதுபழங்கள், உலர்ந்த பழங்கள், பெருங்காயம், குங்குமப்பூ, ரத்னகம்பளம், கைகுட்டைகள், பொகாரா பட்டுவஸ்திரங்கள், குவெட்டா பழவர்க்கச் செடிகள் விலை விவரப் புத்தகம் வேண்டுவோர் குவெட்டா புருட் ஏஜேன்சி குவெட்டா V (India) என்கிற விலாசத்திற்கு இங்குலீஷ் பாஷையிலேயே எழுதிக்கொள்ளவும். Quetta Fruit Agency : QUETTA. India.

TALISMANS & CHARMS

For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life

For Honour, Riches Learning and Greatness.	Rs.	7	8
For Health, physical Strength etc.	...	7	8
For power of Eloquence, Speeches, etc.	...	7	8
For success in any Undertaking or Litigation etc,	...	10	0
For success in Sport Racing, Cards, games of Chance, etc,,		7	8
For Success in spiritual and Religious Life	...	10	0
For Success in Trade and Business	...	10	0
For Agricultural prosperity Farming, Good Crops etc.,		7	8
For Success in Mining Plumbago, etc.	...	100	0
For Success in Gemming	...	225	0
Reabbi Solomon's Special Talisman for every Success		15	0
Specially valued and worn by every successful Hebrew, 2nd quality		21	0
Do, 1st quality		30	0

NOTE— A Money Order or G, C, Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs, 15. two, Rs, 25, three, Rs, 30 or more at a time at Rs, 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance, No V. P. P.

Apply to:—D. A. RAM DUTH.

Astrologer, No. 30 and 55, (I. E.) Cheku Street, Colombo, CEYLON.

AMRUTANJAN

A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS

SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

and All Aches & Pains

Price 10 As a pot.

Amrutanjan Depot

Bombay & Madras

Printed by Mr. T. E. V. SARMA at THE MAGAZINE PRESS, CHINGLEPUT
Published by Mr. A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd. Madras